**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Madurai**

**Case No. C.C - 33/2018**

**Deposition of Witness for Prosecution : P.W. 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : **நல்லகண்ணன்** | Caste | : |
| Father/Husband Name | : **சின்னன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(All Accused Absent. Petition filed and Allowed)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 13.08.2024**

**முதல் விசாரணை**

நான் பெரிய குறவக்குடியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோரை எனக்கு தெரியும். எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியும். கடந்த 2017 ஆம் வருடம் காலை 06.00 மணியளவில் அ.சா.1 வீட்டு அருகே சாக்கடை தண்ணீர் ரோட்டில் போய் கொண்டிருந்தது. சாக்கடையை எடுத்து கொண்டிருந்தார்கள். அப்போது எதிரிகள் அனைவரும் சேர்ந்து அ.சா.2ஐ அடித்து காயம் ஏற்படுத்திவிட்டார்கள். உக்கிரபாண்டி மயங்கி விட்டார். ஆம்புலன்சு மூலம் அவரை சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நாகரத்தினம் தோட்டத்தில் நானும் எனது மனைவியும் வேலை செய்து வருகிறோம். உக்கிரபாண்டி எனது பக்கத்து வீட்டுகாரர் ஆவார். வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் அ.சா.2ன் அக்காவைதான்

நான் திருமணம் முடித்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடக்கும்போது நான் தெருவில் வந்துகொண்டிருந்தேன். நான் வந்தபோது சண்டை நடந்துகொண்டிருந்தது நான் விலக்கிவிட்டேன். நாகரத்தினம் இடத்தில் காலனி வீடு கட்டுவது சம்பந்தமாக எதிரி செல்வம் வழக்கு நடத்தி வருகிறார் என்றால் சரிதான். 06.08.2017 ஆம் தேதியில் எதிரி செல்வம் என்னை தாக்கியதாக அவர் மீது புகார் கொடுத்து குற்ற எண் 171/2017 வழக்கு பதிவு செய்யபட்டுள்ளதா என்றால் சரிதான். நாகரத்தினம் தோட்டத்தில் குடிசை அமைத்தது சம்பந்தமாக எதிரி செல்வம் எங்கள் மீதும் நாகரத்தினம் மீதும் வழக்கு போட்டார் என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், நாகரத்தினத்திற்கு ஆதரவாக எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளால் அ.சா.2க்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றாலும், எங்கையோ ஏற்பட்ட காயத்தை வைத்துகொண்டு எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த இடத்தில் 10 நபர்கள் மேல் இருந்தார்கள். போலீசார் என் வீட்டில் வந்து விசாரணை செய்தார்கள். 2 கழித்து போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SATHIA NARAYANAN

Digitally signed by G SATHIA NARAYANAN
Date: 2024.08.13 14:09:01 +0530

**நீதித்துறை நடுவர் எண்–2,**
**உசிலம்பட்டி.**

**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Madurai**

**Case No. C.C - 33/2018**

**Deposition of Witness for Prosecution : P.W. 2**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | **உக்கிரபாண்டி** | Caste | : |
| Father/Husband Name | : | **பெருமாள்** | Calling | : |
| Village | : | | Religion | : |
| Taluk | : | | Age | : |

**(All Accused Absent. Petition filed and Allowed)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 13.08.2024**

**முதல் விசாரணை**

நான் பெரிய குறவக்குடியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி ஆவார். எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியும். கடந்த 2017 ஆம் வருடம் காலை 09.00 மணியளவில் எங்கள் வீட்டிலிருந்து சாக்கடை தண்ணீர் ரோட்டில் போய் கொண்டிருந்தது. அப்போது எதிரி செல்வம் எனது வீட்டு அருகே வந்து சண்டையை பிடித்து இழுத்து அடித்துவிட்டார். அவரது மகன்கள் சிவரஞ்சன் மற்றும் சிவமணி ஆகியோர்கள் கத்தியால் என்னை இடது கையில் வெட்டிவிட்டார்கள். நான் மயக்கமாகி விழுந்துவிட்டேன். என்னை ஆம்புலன்சு ஏற்றி உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள். வழக்கு சம்பந்தமாக எனது மனைவி அ.சா.1 புகார் கொடுத்தார். பின்னர் போலீசார் நான் சிகிச்சையில் இருந்தபோது என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி செல்வம் வீடு எங்கள் வீட்டிற்கு கிழக்கே உள்ளது. எங்கள் வீட்டிற்கும் எதிரி செல்வம் வீட்டிற்கும் இடையே ஒரு சிறிய சந்து உள்ளது என்றால் சரிதான். எதிரி செல்வம் அவரது வீட்டில் உள்ள மின் அளவு பெட்டியை உடைத்ததாக என் மீது புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. நாகரத்தினம் இடத்தில் காலனி வீடு கட்டுவது சம்பந்தமாக எதிரி செல்வம் வழக்கு நடத்தி வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது சகோதரி பேச்சியம்மாள் நாகரத்தினம் தோட்டத்தில் வேலை செய்து வருகிறார் என்றால் சரிதான். எனது சகோதரி நாகரத்தினம் தோட்டத்தில் வேலை செய்து வருவதால் நான் நாகரத்தினத்திற்கு ஆதவரவாக எதிரி செல்வம் மீது அடிக்கடி பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவம் சுமார் 15 நிமிடம் நடந்தது. அப்போது அங்கு வேறு யாரும் இல்லை. எனது மாமா நல்லகண்ணன் என்பவர் மட்டும் இருந்தார். சம்பவம் நடந்து அன்றே மருத்துவமனையில் போலீசார் வந்து விசாரணை செய்தார்கள். புகாரை எனது மனைவி காவல் நிலையத்தில் கொடுத்தார். நான் சொல்வதுபோல் எதிரிகளால் எனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றாலும், எங்கையோ ஏற்பட்ட காயத்தை வைத்துகொண்டு எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SATHIA NARAYANAN

Digitally signed by G SATHIA NARAYANAN
Date: 2024.08.13 14:09:22 +0530

**நீதித்துறை நடுவர் எண்–2,**
**உசிலம்பட்டி.**

**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Madurai**

**Case No. C.C - 33/2018**

**Deposition of Witness for Prosecution : P.W. 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **கவிதா** | Caste | : | |
| Father/Husband Name | : | **உக்கிரபாண்டி** | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**(All Accused Absent. Petition filed and Allowed)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 13.08.2024**

**முதல் விசாரணை**

நான் பெரிய குறவக்குடியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எதிரிகள் அனைவரும் எனது பக்கத்து வீட்டை சேர்ந்தவர்கள் ஆவார்கள். கடந்த 2017 ஆம் வருடம் தேதி மாதம் நினைவில்லை. காலை 06.00 மணியளவில் நான் எனது வீட்டு அருகே இருந்தபோது, பாலு என்பவர் சாக்கடையை எடுத்துகொண்டிருந்தார். அதற்கு எனது கணவர் உக்கிரபாண்டி கேட்டபோது, எதிரிகள் மூவரும் சேர்ந்து கம்பால் எனது கணவரை அடித்தார்கள். அதனால் எனது கணவரின் வலது காலில் சிறுகாயம் ஏற்பட்டது. அங்கு உள்ளவர்கள் விலக்கிவிட்டார்கள். எதிரிகள் மூவரும் அசிங்கமான வார்த்தைகளால் என்னை பார்த்து திட்டினார்கள். என்னையும் கீழே தள்ளிவிட்டார்கள. எதிரி தனம் என்னை அடித்தார். ஆம்புலன்சுக்கு போன் செய்து எனது கணவரை சிகிச்சைக்காக உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு

கொண்டு போய் சேர்ந்தோம். சம்பவம் பற்றி வாலாந்தூர் காவல் நிலையம் சென்று நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி புகார் **(அ.சா.ஆ. 1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி செல்வம் வீடு எங்கள் வீட்டிற்கு கிழக்கே உள்ளது. சாக்கடை என் வீட்டு முன்பாக செல்கிறது. சம்பவம் முடிந்தவுடன் ஆம்புலன்சு மூலம் மருத்துவமனைக்கு சென்றோம். எங்களுக்கு, எதிரிகளுக்கும் எதிரி செல்வம் வீட்டில் மின் இணைப்பு அளவீடு பெட்டியை உடைத்ததாக என் கணவர் மீது புகார் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. எனது கணவர் வார்டு உறுப்பினராக உள்ளார். எதிரி செல்வம் நாகரத்தினம் என்பவர் மீது காலனி வீடு அமைப்பது சம்பந்தமாக வழக்கு நடத்தி வருகிறார் என்றால் சரிதான். நாகரத்தினம் தோட்டத்தில் எனது கணவரின் அக்கா பேச்சியம்மாள் வேலை செய்து வருகிறார் என்றால் சரிதான். நாகரத்தினத்திற்கு ஆதரவாக செல்வத்தின் மீது எனது கணவர் அடிக்கடி புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. நாகரத்தினத்திற்கு ஆதவராக நடக்காத சம்பவத்திற்கு எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. நாகரத்தினம் இடத்தில் எதிரி செல்வம் குடிசை அமைப்பதாக கூறி அவர் மீது எனது கணவர் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். நாங்கள் மற்றும் நாகரத்தினம் குடும்பத்தார் ஆகியோர் எதிரி செல்வத்தை தாக்கியதாக குற்ற எண் 5/2018 என்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரை நான்தான் எழுதினேன். நான் 6 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். சம்பவம் சுமார் அரை மணிநேரம்

நடந்தது. சம்பவம் நடந்தபோது 10 நபர்கள் இருந்தார்கள். நான் சொல்வதுபோல் எதிரிகளால் எனது கணவருக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றாலும், எங்கையோ ஏற்பட்ட காயத்தை வைத்துகொண்டு எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SATHIA NARAYANAN

Digitally signed by G SATHIA NARAYANAN
Date: 2024.08.13 14:09:32 +0530

**நீதித்துறை நடுவர் எண்–2,**
**உசிலம்பட்டி.**